ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீராரர்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ திருச்சின்னமாலை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ திருச்சின்னமாலை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

மன்னு திரு மந்திரத்தின் வாழ் துவயத்தின் பொருளும்⋆
துன்னு புகழ்க் கீதை தனில் சொன்ன எண்ணான்கின் பொருளும்⋆
அன்ன வயல் கச்சி அருளாளர் திருச்சின்ன ஒலி⋆
இன்ன படி என்றுரைத்தான் எழில் வேதாந்தாரியனே

ஏகாந்த மூன்றும் எழிலால் உரைசெய்து⋆
மாகாந்தம் செய்தருளும் வள்ளல் தான்⋆ சாகாந்த
தேசிகனாம் தூப்புல் திரு வேங்கடேச குரு⋆
வாசகமே எங்களுக்கு வாழ்வு

பரிச்சின்னமான இரு நால் எழுத்தின் பல் வண்மை எல்லாம்⋆
விரிச்சு நலம் பெற ஓதவல்லோர்க்கிந்த மேதினிக்கே⋆
மரிச்சின்ன மீளப் பிறவாமல் வாழ்விக்கும் மால் வரதர்⋆
திருச்சின்ன ஓசையின் இனிமை உண்டோ மற்றைத் தேவருக்கே

‡ஈர் உலகைப் படைக்க எண்ணி இருந்தார் வந்தார்⋆
எழில் மலரோன் தன்னை அன்றே ஈன்றார் வந்தார்⋆
மாருத மண் நீர் ஆகும் மாயோர் வந்தார்⋆
வானொடெரி தாம் ஆகும் மறையோர் வந்தார்⋆
சூரியர் தம்முடனே துலங்கு தூயோர் வந்தார்⋆
சுரர்களுக்கன்றமுதருள் சுந்தரனார் வந்தார்⋆
வாரிதி சூழ் வையகம் வாழ்வித்தார் வந்தார்⋆
வண்மையுடன் வரம் தருவார் வந்தார் தாமே (1)

www.prapatti.com

அரு மறையை ஊழி தனில் காத்தார் வந்தார்⋆
அது தன்னை அன்றயனுக்களித்தார் வந்தார்⋆
தரும வழி அழியாமல் காப்பார் வந்தார்⋆
தாமரையாளுடன் இலங்கும் தாதை வந்தார்⋆
திரு உரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்⋆
திருவருளால் செழும் கலைகள் தந்தார் வந்தார்⋆
மருவலர்க்கு மயக்குரைக்கும் மாயோர் வந்தார்⋆
வான் ஏற வழி தந்தார் வந்தார் தாமே (2)

அனைத்துலகும் காக்கும் அருளாளர் வந்தார்⋆
அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார் வந்தார்⋆
தினைத்தனையும் திருமகளை விடாதார் வந்தார்⋆
தேசொத்தார் மிக்காரும் இல்லார் வந்தார்⋆
நினைக்க நமக்கின் அறிவு தந்தார் வந்தார்⋆
நிலை நின்ற உயிர் தோன்ற நினைந்தார் வந்தார்⋆
எனக்கிவர் நான் இவர்க்கென்ன இனியார் வந்தார்⋆
எழுத்தொன்றில் திகழ நின்றார் வந்தார் தாமே (3)

நாம் வணங்கத் தாம் இணங்கா நிற்பார் வந்தார்⋆
நம்மை அடைக்கலம் கொள்ளும் நாதர் வந்தார்⋆
நாம் எமக்காம் வழக்கெல்லாம் அறுத்தார் வந்தார்⋆
நமக்கிது என்றுரையாமல் வைத்தார் வந்தார்⋆
சேமம் எண்ணி எம்மை அன்பர்க்கடைத்தார் வந்தார்⋆
செழும் தகவால் திண் சரணாம் ஈசர் வந்தார்⋆
தாம் அனைத்தும் தீ வினையைத் தவிர்ப்பார் வந்தார்⋆
தமக்கேயாய் எமைக் கொள்வார் வந்தார் தாமே (4)

உலகெல்லாம் உள்ளே வைத்துமிழ்ந்தார் வந்தார்⋆
உலகுடம்பாய்த் தாம் உயிராய் நின்றார் வந்தார்⋆
அலை கடலாய் ஆனந்தம் அடைந்தார் வந்தார்⋆
அளவில்லா அருள் ஆழிப் பெருமாள் வந்தார்⋆
திலகம் எனும் திருமேனிச் செல்வர் வந்தார்⋆
செழும் குணங்கள் இரு மூன்றும் உடையார் வந்தார்⋆

www.prapatti.com

இலகு சுடர் முழு நலமாம் இனியார் வந்தார்⋆
    எல்லார்க்கும் கதி ஆனார் வந்தார் தாமே (5)

அருளாலே விலங்கிரண்டும் அழிப்பார் வந்தார்⋆
    அஞ்சிறையைக் கழித்தருளும் அன்பர் வந்தார்⋆
மருள் வாரா வகை நம்மைக் காப்பார் வந்தார்⋆
    வானேற வழி நடத்தி வைப்பார் வந்தார்⋆
தெருள் ஆரும் தெளி விசும்பு தருவார் வந்தார்⋆
    திண் கழல் கீழ் வாழ நமக்கருள்வார் வந்தார்⋆
பெரு வானில் அடிமை நம்மைக் கொள்வார் வந்தார்⋆
    பிரியாமல் காத்தளிப்பார் வந்தார் தாமே (6)

அகலகிலாத் திருமகளார் அன்பர் வந்தார்⋆
    அடி இரண்டும் ஆறாகத் தந்தார் வந்தார்⋆
புகல் இல்லார் புகல் ஆகும் புனிதர் வந்தார்⋆
    பொன் உலகில் திருவுடனே திகழ்வார் வந்தார்⋆
அகிலம் எலாம் ஆனந்தம் ஆனார் வந்தார்⋆
    அடி இணைக் கீழ் வைத்தடிமை கொள்வார் வந்தார்⋆
பகல் நடுவே இரவழைக்க வல்லார் வந்தார்⋆
    பகல் ஒன்றாய் இரவழித்தார் வந்தார் தாமே (7)

தருமன் விடத் தாம் தூது போனார் வந்தார்⋆
    தரணி பொறாத் திண் பாரந் தவிர்த்தார் வந்தார்⋆
அரு மறையின் பொருள் அனைத்தும் விரித்தார் வந்தார்⋆
    அஞ்சின நீ என்னை அடை என்றார் வந்தார்⋆
தருமம் எலாம் தாம் ஆகி நிற்பார் வந்தார்⋆
    தாமே நம் வினை அனைத்தும் தவிர்ப்பார் வந்தார்⋆
பரம் எனது நீ புலம்பேல் என்றார் வந்தார்⋆
    பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்தார் வந்தார் தாமே (8)

வஞ்சனை செய் பூதனையை மாய்த்தார் வந்தார்⋆
    மல்லர் மதகரி மாள மலைந்தார் வந்தார்⋆
கஞ்சனைப் போர்க் கடும் சினத்தால் கடிந்தார் வந்தார்⋆
    கண் நுதல் முன் வாணன் தோள் கழித்தார் வந்தார்⋆

வெஞ்சொல் தர வீடு கொடுத்துகந்தார் வந்தார்⋆
விலக்கில்லா வழி நடத்த விரைந்தார் வந்தார்⋆
பஞ்சவரைப் பல வகையும் காத்தார் வந்தார்⋆
பாஞ்சாலி குழல் முடித்தார் வந்தார் தாமே (9)

‡அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்⋆
ஆனை பரி தேரின் மேல் அழகர் வந்தார்⋆
கச்சி தனில் கண் கொடுக்கும் பெருமாள் வந்தார்⋆
கருத வரம் தரும் தெய்வப் பெருமாள் வந்தார்⋆
முத்தி மழை பொழியும் முகில் வண்ணர் வந்தார்⋆
மூலம் என ஓலம் இட வல்லார் வந்தார்⋆
உத்தர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார்⋆
உம்பர் தொழும் கழல் உடையார் வந்தார் தாமே (10)

‡மறைத் தலையில் இசை எழுத்தில் வணங்கும் வாக்கில்⋆
மந்திரத்தில் நாலெழுத்தாம் திருநாமத்தில்⋆
நிறைத்திலகு வேற்றுமையில் இரண்டாம் ஒன்றில்⋆
நெடுமால் தன் கீதை எல்லாம் நிறைந்த சொல்லில்⋆
உறைத்தவர் கண்டுரைத்த பொருளான எல்லாம்⋆
உயர் விரத அருளாளப் பெருமாள் தேசின்⋆
திறத்தில் இயை திருச்சின்னமாலை பத்தும்⋆
செவிக்கினிதாம் சிற்றின்பம் இசையாதார்க்கே (11)

‖ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ‖



www.prapatti.com